பதிவு எண்: M. 6311 ★ தொலைபேசி: 51331 நிறுவியது: 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

# நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர்: இரா. செழியன் எம்.ஏ. எம்.பி.

மலர்: 16] சென்னை: ஆனி 2 (15—6—68) சனி ★ வெளியூர்: ஆனி 3 (16—6—68) ஞாயிறு [இதழ்: 1

## அந்தக் காலம் 'மலையேறி'விட்டது!

சென்னை, ஜூன் 15—

''ஏதாவது பேசி தி. மு. கழகத்தை அழித்துவிடலாம் எனக் காங்கிரசுக்காரர்கள் நினைக்கிறார்கள்!

''நாங்கள் முனைவிட்ட காலத்திலேயே காமராசரும், பக்தவத்சலமும், சுப்பிரமணியமும், மற்றவர்களும், 'கிள்ளி எறிந்துவிட வேண்டும்' என்று முயற்சி செய்தார்கள்; அப்போது அவர்களுக்கு இந்தியத் துணைக் கன்ர

(4-ம் பக்கம் பார்க்க)

# எதிரிகளின் தொல்லைக்கிடையிலும் திறமையான கழக ஆட்சி

## குழப்பிய குட்டையில் மீன் பிடிக்கக் காங்கிரசுக் கட்சியின் முயற்சி

### 'சுப்பிரமணியத்தின் திறமையெல்லாம் காங்கிரசின் பெயரையே கெடுக்கும்'--என். ஜி. ரங்கா கண்டனம்

புதுடில்லி, ஜூன் 15---

தமிழகத்தில் தி. மு. க. ஆட்சிக்கு எதிராகக் காங்கிரசுக் கட்சி நச்சுப் பிரசாரம் செய்துவருவதை வன்மையாகக் கண்டித்தார்--சுதந்தராக் கட்சியின் தலைவர் பேராசிரியர் என். ஜி. ரங்கா.

''எதிரிகளால் பல தொல்லைகள் கொடுக்கப்பட்டபோதிலும், தி. மு. க. ஆட்சி திறமையாக நிர்வாகத்தை நடத்திச் செல்கிறது'' என்று கூறி அவர் பாராட்டுத் தெரிவித்தார்.

செய்தியாளர் ஒருவருக்கு அவர் அளித்த பேட்டியில் மேலும் கூறியதாவது:—

''அதிகாரத்தைப் பெறுவதற்காகக் காங்கிரசுக் கட்சி மிகவும் பொறுமையிழந்து காணப்படுகிறது; எனவே, குழம்பிய குட்டையில் மீன் பிடிக்க முயற்சி செய்கிறது!

திரு. சி சுப்பிரமணியம் தமது தனித் திறமையையெல்லாம் காங்கிரசின் புகழைக் கெடுத்து மேலும் மோசமாக்குவதற்காகவே பயன்படுத்திக் கொண்டிருப்பது கண்டு நான் மிகவும் வருந்துகிறேன்.

எத்தகைய சூழ்ச்சித் திறத்தாலோ, தூண்டிவிடப்படும் இயக்கத்தாலோ காங்கிரசை மீண்டும் பதவியில் தூக்கி அமர்த்துவது என்பது இயலாத காரியம்.

பல ஆண்டுகள் ஆட்சி அதிகாரங்களில் இருந்து ஆண்டு அனுபவித்த பின்னரும்கூடக் காங்கிரசுக் கட்சி, எப்படி எதிர்க் கட்சியாக இருந்து பொறுமையாக நடந்து கொள்ள வேண்டும்--குறைந்தது ஓர் ஐந்தாண்டுக் காலமாவது பொறுமையாக இருக்க வேண்டும் என்பதை அது கற்றுக்கொள்ளவில்லை.''

## கலக நாகர்களுக்குக் கடும் எச்சரிக்கை!

கோகிமா, ஜூன் 15—

''கலக நாகர்கள் சீனவிலிருந்து ஆயுதங்கள் கொண்டுவருவதை நிறுத்தாவிடில், அவர்களிடம் நாகாலந்து அரசு காட்டிவரும் நிதானப் போக்கை மாற்றிக் கொள்ளவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படும்''

என்று நாகாலாந்து முதலமைச்சர் என். டி. அங்காமி எச்சரித்திருக்கிறார்.

### அரசைக் கவிழ்க்கத் திட்டமிடுகின்றனரா?

செஞ்சீனவின் உதவியுடன் நாகாலாந்து அரசைக் கவிழ்ப்பதற்குப் பெரும் திட்டமொன்று வகுக்கப்பட்டிருப்பதை, கலக நாகர்களிடமிருந்து கைப்பற்றப்பட்ட சான்றேடுகள் எடுத்துக் காட்டுகின்றனவாம்!

## வெல்ல ஏற்றுமதி தடைசெய்ய யோசனை

### மைசூர் அரசு முடிவு?

பெங்களூர், ஜூன் 15—

மாநிலத்திற்கு வெளியே வெல்ல ஏற்றுமதியைத் தடை செய்வது பற்றி மைசூர் அரசு தீவிரமாகப் பரிசீலனை செய்து வருகிறது.

மைசூர் அமைச்சரவை, இது பற்றி விவாதித்தது; இதன் விளைவாக, வெல்ல ஏற்றுமதித் தடை குறித்து விரைவில் முடிவு செய்யக் கூடும்.

## தீ விபத்து நேர்ந்த இடத்தில் அமைச்சர் சத்தியவாணிமுத்து

### பாதிக்கப்பட்டோரின் சோகக் கதை கேட்டுக் கண்கலங்கினர்

சென்னை, ஜூன் 15—

அயல்நாட்டுச் சுற்றுப்பயணத்தை முடித்துக்கொண்டு சென்னை வந்த அமைச்சர் சத்தியவாணிமுத்து அவர்கள், விமானத்தை விட்டிறங்கியதும் நேராகத் தம் வீட்டுக்குப் போகவில்லை; மாறாக, தமது தொகுதியில் தீ விபத்தால் பாதிக்கப்பட்ட புளியந்தோப்பு, வியாசர்பாடி பகுதிகளுக்குச் சென்று பார்த்தார்.

பாதிக்கப்பட்டவர்களின் சோகக் கதைகளைக் கேட்டுக் கண் கலங்கினர், அத்துடன், எடுக்கப்பட்டுவரும் நிவாரண நடவடிக்கைகளைக் கேட்டறிந்தார்.

குடிசைகளை இழந்த மக்களுக்கு ஆறுதல் கூறிய பின்னரே அவர், வீட்டுக்குப் புறப்பட்டுச் சென்றார்.

## பட்டினியால் செத்துக்கொண்டிருக்கும் ஒரிசா மக்கள்

### நேரிலேயே கண்டார் மத்திய துணையமைச்சர்

கட்டாக், ஜூன் 15—

ஒரிசாவில் பட்டினியால் மக்கள் செத்ததையும், செத்துக் கொண்டிருப்பதையும் தாம் நேரில் கண்டதாகக் கூறினர்—மத்திய செய்தி ஒலிபரப்புத் துறைத் துணையமைச்சர் திருமதி நந்தினி சத்பதி.

ஒரிசா மாநிலத்தில் பஞ்சத்தால் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ள பகுதியில் அவர் இரண்டு நாள் சுற்றுப்பயணம் மேற்கொண்டார்.

தமது சுற்றுப்பயணத்தின் போது, தம் கண்ணெதிரிலேயே சிலர் பட்டினியால் செத்ததைக் கண்டதாகவும், பலர் செத்துக்கொண்டிருக்கும் செய்தியைக் கேள்விப்பட்டதாகவும் அவர் கூறினர்.

## உதகை இரயில்பாதை தப்பிப் பிழைக்கும்!

### நேரில்கண்ட அமைச்சர் உறுதிமொழி

உதகை, ஜூன் 15—

உதகை—மேட்டுப்பாளையம் இரயில்பாதை நீடித்திருக்க வேண்டும் என்பதை மத்திய இரயில்வே துணையமைச்சரும் ஒப்புக் கொண்டுவிட்டார்.

இந்த இரயில்பாதையை எடுத்துவிட மத்திய அரசு விரும்பியதும், தென்னகத்திலிருந்து மூண்டெழுந்த எதிர்ப்பைக் கண்டு டெல்லி இதுபற்றி மறு ஆய்வு செய்ய ஒப்புக்கொண்டு துணை இரயில்வே அமைச்சரான ரோகன்லால் சதுர்வேதியை நீலகிரிக்கு அனுப்பிவைத்தது.

திரு. சதுர்வேதி இங்குவந்து நிலைமையை நேரில் கண்டும் கேட்டும் அறிந்தபின், இந்தப் பாதை நீடித்திருக்க வேண்டும் என்றே தாமும் கருதுவதாகத் தெரிவித்துள்ளார்.

இப்பாதை நீடித்திருக்க வேண்டும் என்பதைத் தாம் உணருவதாகவும், தம்மால் முடிந்தவரை இப்பாதை நீடித்திருப்பதற்கு மத்திய அரசில் வாதிடுவதாகவும் நீலகிரி பொதுமக்களுக்கு அவர் உறுதியளித்தார்.

இந்தப் பாதையில் டீசல் எஞ்சின்களைவிடும் திட்டம் ஆய்வில் இருப்பதாகவும் துணையமைச்சர் கூறினர்.

## பாகிஸ்தானுக்குப் 'பேட்டன்' டாங்கிகள்

### இத்தாலி விற்க[illegible]

புதுடில்லி, ஜூ[illegible]—

100 அமெரிக்கப் 'பேட்டன்' டாங்கிகளை பாகிஸ்தானுக்கு விற்கும் திட்டத்தைத் திரும்பப் பெறுவதுபற்றி இத்தாலி பரிசீலனை செய்துகொண்டிருக்கிறதாம.

இந்த டாங்கிகளின் விற்பனையை ரத்துச்செய்வது என்று இத்தாலி இறுதியாக முடிவு செய்தால், மற்ற நாடுகளிலிருந்து இந்த ஆயுதங்களை வாங்க பாகிஸ்தான் முயற்சிக்கக் கூடுமாம்.

★

## மொரீஷியஸ் தமிழ் மக்களின் மறுமலர்ச்சிக்கு உதவுவோம்!

சென்னை, ஜூன் 15—

'மொரீஷியஸ் தீவுக்குச்சென்று வந்த நான், பிழைப்புத் தேடிச் சென்று அங்கேயே நிலையாகத் தங்கிவிட்ட நம் தமிழின மக்களைக் கண்டேன். அவர்கள் பெயர்கள் எல்லாம் தமிழில் இருக்கின்றனவே தவிர, அவர்களது பேச்சும், நடையுடை பாவனைகளும், பிரஞ்சும் ஆங்கிலமும் கலந்த ஒரு கலப்பாகவே உள்ளன.

''பெரும்பாலான தமிழ் மக்கள், தங்கள் தாய்மொழியையே மறந்திருக்கிறார்கள்! அந்தத் தீவில் பிரெஞ்சுக்காரர்களும், ஆங்கிலேயர்களும் வாழ்ந்தாலும், பெரும்பாலோர் தமிழினத்தைச் சார்ந்தவர்களாகவே இருப்பதால், ஆட்சிப் பொறுப்பில் அமைச்சர்களாகவும், எதிர்க் கட்சித் தலைவராகவும் தமிழர்கள் இருக்கிறார்கள்.

''அவர்களிடையே தற்போது தமிழார்வமும், தமிழ் உணர்ச்சியும் பெருகியிருக்கின்றன. அவர்களது ஆர்வம் காரணமாக, நாளடைவில் தங்கள் தமிழ் உணர்வைப் பெருக்கிக் கொள்வார்கள். அதற்கு இந்தியத் துணைக்கண்ட அரசின் ஆதரவுடன் வேண்டிய உதவிகளைச் செய்து தருவதாக உறுதியளித்து வந்திருக்கிறேன்.''

—செய்தித் துறை அமைச்சர்
**சத்தியவாணிமுத்து**
(சென்னை 61-வது வட்ட வரவேற்புக் கூட்டத்தில்)

# சட்டவிரோதமான கார் விற்பனை

## நாடாளுமன்ற உறுப்பினர்கள் — அதிகாரிகள் உட்படப் பலர் ஈடுபட்டனர்

### இதுவரை ரூ. 1,10,000 வரை அபராதம் விதிப்பு

புதுடில்லி, ஜுன் 15—

'ஒரு குறிப்பிட்ட காலம் வரை விற்கக்கூடாது' என்ற நிபந்தனையை மீறி—அந்தக் காலக்கெடு முடிவதற்குள் கார்களையும், ஸ்கூட்டர்களையும் விற்பவர்களைக் கண்டுபிடிக்க மத்திய துப்பறியும் நிறுவனம் தீவிரமாக முனைந்துள்ளது. இதன் பலனாக, இதுவரை ரூ 1,10,000 வரை அப்படிப்பட்டவர்களுக்கு அபராதம் விதிக்கப்பட்டிருக்கிறது.

மத்திய துப்பறியும் நிறுவனம் 185 பேர்கள்மீது வழக்கு பதிவு செய்தது; அவர்களில் 74 பேர் தண்டிக்கப்பட்டனர்.

விசாரணை முடிவடைவதற்கு முன் இரண்டு பேர் இறந்துவிட்டனர். இன்னும் 109 பேர்கள் மீதான வழக்குகளில் விசாரணை முடிவடையாமலிருந்து வருகிறது.

இன்னும் 55 பேர்கள் தொடர்பாக புலன்விசாரணை நடைபெற்று வருகிறது.

இத்தகைய குற்றத்தைச் செய்து மத்திய துப்பறியும் நிறுவனத்திடம் சிக்கியவர்களில் நாடாளுமன்ற உறுப்பினர்கள், அரசு அதிகாரிகள் (சிவில்—இராணுவம் ஆகிய இரு துறைகளையும் சேர்ந்தவர்கள்), வியாபாரிகள் ஆகியோரும் உள்ளனர்.

ஏற்கனவே இரு நாடாளுமன்ற உறுப்பினர்கள் நீதிமன்றத்தில் குற்றவாளிகள் எனத் தீர்ப்பளிக்கப்பட்டுவிட்டனர். ஒரு 'ஸ்குவாட்ரன லீடர்'ரும், ஒரு டெலிபோன் இன்ஸ்பெக்டரும் தண்டிக்கப்பட்டிருக்கின்றனர்.

சட்டப்படி ஒருவர் ஒரு புதிய காரையோ, ஸ்கூட்டரையோ வாங்கினால் அதை ஒரு குறிப்பிட்ட காலம்வரை முன் அனுமதி பெருமல் விற்கவோ, மற்றவருக்கு மாற்றவோ கூடாது; அதாவது, கார் வாங்கிய நாளிலிருந்து இரண்டாண்டு முடியும் வரையிலும், ஸ்கூட்டர் வாங்கி ஓராண்டு முடியும் வரையிலும் கட்டுப்பாட்டு அதிகாரியின் முன் அனுமதி பெருமல் விற்க முடியாது.

டெல்லியிலும், மற்றும் சில இடங்களிலும் வாங்கப்பட்ட கார்கள் பம்பாய்க்குக்கொண்டு செல்லப்பட்டு அங்கு விற்கப்படுவதாகத் துப்பறியும் நிறுவனம் கூறுகிறது.

பம்பாயில் எந்தவிதமான கார்களாக இருந்தாலும், அதற்கு நல்ல கிராக்கி இருக்கிறதாம். எனவே, பம்பாயில் உள்ள நிறுவனங்களில் அந்தக் கார்களை, விற்பனைக்குரிய காட்சி அறைகளிலேயே பகிரங்கமாகவைத்து விற்கிறார்களாம். இவற்றை வாங்கியவர்கள் தங்கள் பெயரிலேயே பதிவுசெய்து கொள்கின்றனராம். இதற்குச் சட்டவிரோதமான வழிமுறைகளெல்லாம் கையாளப்படுகின்றனவாம்.

ஏற்கனவே பதிவு செய்யப்பட்ட அதே காரை, மறுமுறையும் புதிதாகப் பதிவு செய்திருப்பது கண்டு பிடிக்கப்பட்டு, 50 கார்கள் தொடர்பாக வழக்குப்பதிவு செய்யப்பட்டதாம்; அவற்றில் 45 வழக்குகள் முடிவுற்று தண்டனை விதிக்கப்பட்டது; 5 வழக்குகள் முடிவடையாமலிருக்கின்றன.

ஸ்கூட்டர்கள் மறு விற்பனை சம்பந்தமாக எட்டு வழக்குகள் பதிவு செய்யப்பட்டு அவற்றில் 5 வழக்குகளில் தண்டனை வழங்கப்பட்டுவிட்டது; 3 வழக்குகள் முடிவடையாமல் இருக்கின்றன.

வியாபாரத்துறை வாகனம் சம்பந்தமாக இரண்டு வழக்குகளில் புலன் விசாரணை நடந்துவருகிறது.

---

# எதையோ செய்துவிட்டுச்

## சமாதானம் கூறித்

### தப்பிக்க முயலுகின்றனர்!

மத்திய அரசின் கல்வி அமைச்சரகத்தைச் சேர்ந்தவர்கள் கொஞ்ச நேரம் சும்மாயிருக்க மாட்டார்களா?

அவ்வப்போது, இந்தியைப் பரப்புவது பற்றி ஏதாவது இரகசியச் சுற்றறிக்கைகள் விடுத்துக் கொண்டிருந்தால்தான் அவர்களுக்குப் பொழுது போகுமா?

உதாரணமாக, 'மத்திய அரசு நிர்வாகத்தின் கீழ் உள்ள பள்ளிகளில் கணிதம், விஞ்ஞானம் அல்லாத பாடங்களை இனி ஆங்கிலத்தில் கற்றுத் தரக்கூடாது' என்றும், 'படிப்படியாக இந்தியே பயிற்சி மொழியாக வேண்டும்' என்றும், மார்ச் மாதம் இறுதியில் அவர்கள் ஒரு சுற்றறிக்கையை அனுப்பியிருக்கிறுர்கள்!

"மத்திய பள்ளிகளில் ஆங்கிலம், இந்தி என்று இனி இரு பிரிவுகள் இருக்கக் கூடாது என்றுல் என்ன அர்த்தம்? சர்க்காரின் கல்விக் கொள்கையில் மாற்றம் செய்திருக்கிறீர்களா?'' என்று கேட்டால், 'அப்படி ஒன்றுமில்லையே! இம்மாதிரி ஏதாவது சுற்றறிக்கை அனுப்பப்பட்டிருந்தால், அதைப் பற்றி விசாரிக்கிறேன்' என்கிறுர் கல்வியமைச்சர் திரிகுண சென்.

"அந்தச் சுற்றறிக்கையில் 'ரகசியம் ஒன்றுமில்லை; ஆனுல், அதை உங்களிடம் காண்பிக்க மாட்டேன்' என்று பத்திரிகை நிருபர்களிடம் கூறுகிறுர் — ராஜாங்க அமைச்சர் பகவத் ஜா ஆசாத்.

"சுற்றறிக்கையா? அப்படி ஒன்றும் புதிதாக அனுப்பப்படவில்லையே; பழைய கொள்கை அப்படியேதான் இருக்கிறது'' என்று விளக்கம் கொடுக்கிறுர் மற்றுேர் அமைச்சர்ஷேர் சிங்.

எதையோ செய்துவிட்டு, அதற்கு ஏதோ சமாதானம் கூறி, எப்படியோ தப்பித்துக் கொள்ளப் பார்க்கிறுர்கள்!

"இந்தியை எவர்மீதும் திணிக்கப்போவதில்லை; இந்தியோடு ஆங்கிலமும் தொடர்ந்து இருந்துவரும்; இந்தி பேசாத மக்கள் ஆங்கிலத்தில் பயிற்சி பெறவும், பரீட்சை எழுதவும் ஒருவிதத் தடையும் இருக்காது'' என்று ஏற்கெனவே மத்திய அரசு திட்டவட்டமாக அறிவித்திருக்கிறது. அப்படியிருக்க, மீண்டும் மீண்டும் கல்வி இலாகாவைச் சேர்ந்தவர்கள், ஏன் இந்தியை நுழைப்பதில் இப்படி ஆர்வமும் அவசரமும் காட்டி, இந்தி பேசாத மக்களை ஆத்திரமூட்டுகிறுர்கள்? ஏன் சும்மா இருக்கும் சங்கை ஊதிக் கெடுக்கிறுர்கள்?''

'இந்தி வெறி'தான் இதற்கெல்லாம் காரணமென்றுல், இவர்களது சிந்தனையற்ற செயல்கள் உடனே தடுத்து நிறுத்தப்பட வேண்டும். மீறி நடப்பவர்கள் யாராயிருந்தாலும் பதவியிலிருந்து உடனடியாக நீக்கப்பட வேண்டும்!

—'ஆனந்தவிகடன்'

---

# தியாகத்தால் வளர்ந்தவர்கள் நாம்!

## எப்படியோ பதவிக்கு வந்துவிட்டதாகத் தப்புக் கணக்குப் போடுகிறுர்கள்

### 'படி அரிசி கேட்கும்' காங்கிரசாருக்கு கி. மனேகரன் தரும் பதில்

6—6—68 அன்று கரூர் தியாகராயர் திடலில், நகர தி. மு க. சார்பில் மாபெரும் பொதுக் கூட்டம் நடைபெற்றது.

நகர மன்ற உறுப்பினர் தோழர் பி. தாந்தோணி தலைமை தாங்கினுர்.

தோழர்கள் வை. இரத்தினவேலு, பரமத்தி சண்முகம், நகர செயலாளர் என். ஆர். இராமசாமி, வட்ட செயலாளர் ஆர். என். இராமசாமி, எம். மாரிமுத்து சுப. இராசகோபால், திருச்சி நகர செயலாளர் அ. நடராசன், வி. எம். கணேசன் ஆகியோர் பேசினர்.

இறுதியில், தோழர் கி. மனேகரன் எம். ஏ., எம்.பி அவர்கள் ஆற்றிய உரையின் சுருக்கமாவது:—

"நமது இயக்க வளர்ச்சியைப் புரிந்து கொள்ளாத மாற்றுக் கட்சியினர், 'எப்படியோ இயக்கம் வளர்ந்து விட்டது; எங்கேயோ கிடந்தவர்கள் எப்படியோ பதவிக்கு வந்து விட்டார்கள்' என்று எண்ணிக் கொண்டிருக்கிறுர்கள்.

நாம் எத்தகைய தியாகத்தின் அடிப்படையில் வளர்ந்தோம் என்பதற்கு எடுத்துக்காட்டாக, '1965-ஆம் ஆண்டில் நடைபெற்ற இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சியின்போது காங்கிரசு ஆட்சியாளர்களின் துப்பாக்கிக் குண்டுக்குப் பலியாகி—இதே கரூர் மண்ணில் மாண்டு மறைந்த தியாகி சந்தானத்தின் பெயரால் அமைந்த மன்றத்தின் சார்பில் மாலையணிவித்தீர்கள்!

நான்கு ஆண்டுகளுக்கு முன், மாண்ட வீரன சந்தானம், இதே கரூர் வீதிகளில் கம்பீரமாக நிமிர்ந்து நடைபோட்டிருப்பான்; ஆனுல் இன்று பல்லாயிரக் கணக்கில் வீற்றிருக்கும் உங்களிடையே நான் பேசிககொண்டிருக்கும இந்த நேரத்தில், கல்லறைககுள் மௌனம் சாதித்துக் கொண்டிருக்கிறுன்!

தமிழகத்தின் வரலாற்றில்—எழுதப்படும் காவியங்களில்—பாடும் கவிதைகளின் வீரவரிகளில் அவனது பெயர் சிறப்பாக இடம் பெறும்!

கரூர் மண், சழகத் தோழர்களின் இரத்தத்தால் நனைக்கப்பட்டது! இன்னமும் அந்த மண்ணை முகர்ந்தால், இரத்த வாடை வீசும்! அந்த அளவுக்குத் தியாகப் பாரம்பரியத்தைப் பெற்றுள்ளது!

எனவே, 'தியாகிகளின் கூடாரம் தி. மு. க.' என்பதற்கு, இதைவிட வேறென்ன சான்று தேவை? இருநதும், 'எப்படியோ வளர்ந்துவிட்டார்கள்' என்று நினைப்பது [illegible] மடத்தனமாகும்.

இதே இடத்தில் சிறிது நாட்களுக்கு முன்பு காங்கிரசுப் பெருந் தலைவர் காமராசரும், சுப்பிரமணியமும் பேசினுர்களாம; அவர்கள், 'படி அரிசி எங்கே?' என்று கேட்டார்களாம்.

நான் அவர்களைச் சற்று நாணயத்தோடு பதில் கூறுமாறு கேட்கிறேன்—'நீங்கள் இந்த நாட்டை ஆண்ட காலம் இருபது ஆண்டுகள்; நாங்கள் பொறுப்புக்கு வந்து ஒன்றரை ஆண்டுக் காலமாகிறது; இயற்கை சனநாயகத் தத்துவப்படி பொதுமககள் எங்களுக்குக் கொடுத்திருக்கும் கால அளவு ஐந்தாண்டுகளாகும்; 1972-ல் கேட்கவேண்டிய கேள்வியை இப்போது கேட்கிறீர்களே -- நியாயம்தானு? நேர்மைதானு?' என்று.

வெள்ளையன் இந்த நாட்டைவிட்டு வெளியே போகும்போது காங்கிரசார் வாதப்படி, நாட்டைச் சுரண்டிப் போனுன்—மறுக்கவில்லை!

அவனது பூமியான இலண்டனைச் செழிக்கவைக்க இங்குள்ள வளம் அனைத்தையும் எடுத்துச் சென்றுன்—மறுக்கவில்லை!

ஆனுல், இங்கே அவன் போட்ட இரயில் பாதைகளை அகற்றவில்லை; உருவாக்கிய பெரிய கட்டிடங்களை இடிக்கவில்லை; தொலைபேசியை அகற்றவில்லை! தந்திக் கம்பிகளை—அஞ்சல் நிலையங்களை நல்ல சட்ட திட்டங்களை—அமர்ந்து பரிபாலனம் செய்யத்தக்க மாடமாளிகைகளை—நல்ல சாலைகளை—ஒளி விளக்குகளை ஏற்படுத்தி—விழியைத் திறந்து வழியை வகுத்துவிட்டுப் போனுன்!

அதைவிட, 1,600 கோடி ஸ்டர்லிங்கை வைத்துவிட்டுப் போனுன். ஒரு முட்டாள்கூட ஆட்சியை நடத்தும் அளவுக்கு வசதி செய்து வைத்துவிட்டுச் சென்றுன்!

நான் ஆப்பிரிக்காவுக்குச் சென்றிருந்தபோது, அங்கே 'மாலி' என்ற சின்னஞ்சிறு நாட்டில் உள்ள சில பெரியவர்களைச் சந்தித்தேன்; அவர்கள் கூறியது என் இதயத்தைப் பிளப்பதாக இருந்தது:—"பிரெஞ்சுக்காரர்கள், 'மாலி'யை அடிமைகொண்டு ஆண்டபோது அதை எதிர்த்துப் போராடினேம்; எங்கள் உரிமைக் கிளர்ச்சியைக் கண்ட பிரெஞ்சு அரசு, 'இனியும் மாலியை ஆள முடியாது' என்பதை அறிநது ஒருநாள் உத்தரவு ஒன்றைப் போட்டது; 'மாலியைக் காலி செய்துவிட வேண்டும்; அப்படிச் செய்யும்போது, அதன் உயர்ந்த கட்டிடங்களை இடித்துத் தரை மட்டமாக்கிவிட்டு—தந்திக் கம்பிகளை அறுத்தெறிந்துவிட்டு—இரயில் தடங்களைத் தகர்த்து நிர்மூலமாக்கிவிட்டு—வாருங்கள்' என்று அந்த உத்தரவில் கூறப்பட்டிருந்தது; அதன்படியே செய்தனர்; மாலி, பாலைவனமாகியது'' என்று விளக்கினர்; பிறகு நான் கேட்டேன்—'இந்த ஒன்பது ஆண்டுகளில் எப்படி இவ்வளவு முன்னேறினீர்கள்?' என்று; அவர்கள் சொன்னுர்கள்—'எங்கள் சொந்தக் கால்களாலேயே நடந்தோம்; உழைத்து முன்னேறினேம்' என்று.

இங்கு 20ஆண்டுக்காலத்தில்போடப்பட்ட மூன்று ஐந்தாண்டுத் திட்டங்களில் செலவழிக்கப்பட்ட தொகை ரூ. 22 000 கோடி! உலக நாடுகளில் வாங்கிய கடன் ரூ. 6 000 கோடி! இருந்தும், காங்கிரசு ஆட்சியினரால் உணவுச் சிக்கலைத் தீர்க்க முடிந்ததா?

போடப்பட்ட திட்டங்கள் படுதோல்வியடைந்துவிட்டதாகக் காங்கிரசு அமைச்சர் வி. கே. ஆர். வி. ராவ் கூறியுள்ளாரே—அப்படியானுல், வாங்கிய வரிகள்--எழுப்பிய கடன்கள் அனைத்தும் இவர்களுடைய 'விளையாட்டு'க்காகத்தானு? இதற்காக அவர்கள் தண்டனை பெற வேண்டாமா?

1967-ல் அவர்கள், ஆட்சியை அண்ணுவிடம் ஒப்படைக்கும்போது என்ன—எங்கும் நீக்கமற நிரம்பிய வளமும், எழில்கொலுங்கும் சோலைகளும், நிதி நிறைந்த கஜானுவுமா இருந்தன?

இன்றைக்குத் துணைக்கண்டத்தின் மாநிலங்களில் பீகாரின் நிலை என்ன? வங்காளத்தில் உணவு நிலை என்ன? கேரளத்தின் நிலை என்ன? தமிழகம் எப்படி?—இங்கு உணவுப் பஞ்சம் உண்டா?

1967-க்குப்பின், அரிசிக் கடைக்குச் சென்று, 'அரிசி கிடைக்கவில்லை' என்று திரும்பிய ஒரு நபரை யாராவது கூறட்டும்—நான் கட்சியைவிட்டே விலகுகிறேன்.

இத்தனைக்கும், காங்கிரசார் போனபின், இந்த ஒன்றரை ஆண்டில் திடீரென வளம் பொங்கி வழிந்துவிட்டதா?—இல்லையே!

இருந்தும், நிலைமையில் முன்னேற்றம் எப்படி ஏற்பட்டது?—திறமையான நிர்வாகம்! தயவு தாட்சண்யமற்ற நீதி பரிபாலனம்!

இதே காங்கிரசு ஆட்சியில் செங்கற்பட்டு மாவட்டத்தில், பங்களாக்களுக்குள் பதுக்கப்பட்டிருந்த உணவுப் பொருளைக் கண்டுபிடித்தும், அதனைப் பறிமுதல் செய்ய முடிந்ததா—காவல் துறையினரால்! காரணம், அங்கே முதலில் அல்சேஷியன் நாய்; அதைத் தாண்டினுல், இரண்டு படங்கள்; அவற்றில் ஒன்றில்—காமராசர் உருவம்; மற்றென்றில் பக்தவத்சலம்உருவம்; கடமையாற்றத் தயங்கினுர்—காவல் துறை அதிகாரி!

ஆனுல் இன்று, அதே பங்களாக்களிலிருந்து அதே போலீசு அதிகாரி, எந்தப் பயமும் தயக்கமும் இன்றி பதுக்கலைக் கொண்டுவரவில்லையா?

எனவே, நாடு இன்று நல்லாட்சியைப் பெற்றுவிட்டது! இது [illegible]டுபொருதவர்கள், கறுப்புக் [illegible]டி காட்டுகிறுர்கள்!

இன்றைக்குக் காங்கிரசுக்காரர்களின் கொடிய பார்வை, கருணுநிதியின் உயிர்மீது இருக்கிறது; அவர்களுக்குக் கூறிக்கொள்வேன்—'கருணுநிதியின் மீது தாக்குதல் நடத்தி அவரை நிர்மூலமாக்கினுல் பிரச்சினை தீர்ந்துவிடாது' என்று!''

---

# அமைச்சர்கள் தொகை அதிகரித்ததால் வீட்டு நெருக்கடி!

## மைசூர் துணையமைச்சர்களின் திண்டாட்டம்

பெங்களூர், ஜுன் 15—

மைசூரில் சில இளம் அமைச்சர்களுக்கு இன்னும வீட்டு வசதியும், அலுவலக வசதியும் கிடைக்கவில்லை.

இரண்டு மூன்று துணையமைச்சர்களுக்கு சட்டமன்றத்தில் அலுவலகம வைத்துக்கொள்ள முடியவில்லை.

மற்றும் 11 துணையமைச்சர்கள் வீட்டு வசதி இல்லாமல் திண்டாடுகிறுர்கள்.

வீட்டு வசதிக்கு அதிகபட்சமாக ரூ. 500-தான் வாடகை தரலாம் என்று அரசு நிர்ணயித்திருக்கிறது.

சில கட்டிடங்களின் வாடகை திடீரென்று உயர்ந்துவிட்டது: ஒரு கட்டிடச் சொந்தக்காரர் அதை ரூ. 550-க்கு வாடகைக்கு விடத் தயாராயிருந்தாராம் அந்த வீட்டைத் தங்களுக்கு வேண்டுமென்று கேட்டு இரண்டு மூன்று அமைச்சர்கள் தொலைபேசியில் கேட்டதும் அவர், வாடகையை ரூ. 850-ஆக உயர்த்திவிட்டாராம்!

அரசாங்கக் கட்டிடம் கிடைக்காதவர்கள், சட்டமன்ற விடுதியில் தங்கியிருக்கிறுர்கள்.

சில முன்னுள் அமைச்சர்கள் இன்னும் தங்கள் வீடுகளைக் காலி செய்யவில்லையென்றும் தெரிகிறது.

---

புதுடில்லி, ஜுன் 14—

கோதுமை வாங்குவதற்காக இந்தியாவுக்கு மேற்கொண்டு 2-கோடி டாலர் கனடா உதவியிருக்கிறது.

# கடும் எதிர்ப்புக்குப் பின் இறங்கி வருகிறது டெல்லி

## உதகை--மேட்டுப்பாளையம் இரயில் பாதை பற்றி மறு ஆய்வு

### நேரில் பார்வையிட மத்திய துணை அமைச்சர் வந்தார்

கோயமுத்தூர், ஜூன் 15—
உதகமண்டலம்-மேட்டுப்பாளையம் இரயில் பாதையை மத்திய இரயில்வே துணையமைச்சர் ஆர். சதுர்வேதி பார்வையிட்டார்.

இந்தப் பாதை இலாபகரமாக இல்லாததால் இதை எடுத்துவிட மத்திய அரசு உத்தேசித்திருப்பதற்குப் பொதுமக்களிடமிருந்து பலத்த எதிர்ப்புக் கிளம்பியிருப்பதால், இந்தப் பாதையை நேரில் பார்வையிட அவர் வந்தார்.

"மேட்டுப்பாளையம்—உதகை இரயில் பாதையை அகற்றுவது சம்பந்தமாக இரயில்வேத் துறை இறுதியாக முடிவு எதுவும் செய்யவில்லை; இலாபகரமாக இல்லாத இரயில் பாதைகளை எடுத்துவிட வேண்டுமென்பது எங்கள் விருப்பமெனினும், சம்பந்தப்பட்ட மாநில அரசுகளைக் கலக்காமலும் ஏனைய நலன்களையும் ஆலோசிக்காமலும் அவசரப்பட்டு முடிவு செய்யமாட்டோம்" என்று சதுர்வேதி கூறினார்.

"நான்காவது திட்ட காலத்தில் புதிய இரயில் பாதைகள் அமைக்கும் வேலை மேற்கொள்ளப்படுமா?' என்று கேட்டதற்கு, 'புதிய திட்டங்களை ஆரம்பிப்பதற்குப் பதிலாக ஏற்கனவே மேற்கொள்ளப்பட்ட திட்டங்களை முடிப்பதில் அதிக கவனம் செலுத்தப்படும்' என்று சொன்னார்.

நெல்லை — கன்னியாகுமரிக்கு இடையே இரயில் அமைப்பதற்கு ஆய்வு நடந்துகொண்டிருக்கிறது என்றும், இந்த வேலை துரிதப்படுத்தப்பட வேண்டுமென்பது தமது விருப்பம் என்றும் கூறினார். இந்தத் திட்டம் நான்காவது திட்ட காலத்தில் மேற்கொள்ளப்பட இயலாது என்று தாம் சொல்ல முடியவில்லையென்றார், ஆனால், தற்போது திட்டமாக உறுதிமொழி எதுவும் தரும் நிலைமையில் இல்லை யென்றும் அவர் கூறினார்.

கரூர்—தூத்துக்குடிப் பாதைக்கும் ஆய்வு நடந்துவருகிறது என்று சொன்னார்.

திரு பி. ஏ. சாமிநாதன் எம்.பி., திரு. மாயவன் எம்.பி. ஆகியோருடன் அவர் உதகைக்குப் பயணமானார்.

அமைச்சருக்கு உள்ளூர் தி. மு. க. தோழர்கள் மாலைகள் அணிவித்தனர். உதகை—மேட்டுப்பாளையம் இரயில் பாதையை அகற்றாமல் நீடித்து வைத்துக் கொள்ள வேண்டும் என்று வற்புறுத்தி ஒரு மனுவை அவர்கள் அமைச்சரிடம் கொடுத்தனர்.

---

நிர்வாக அமைப்பை மாற்றியமைக்க.......

# புதிய அரசியலமைப்பு சட்டங்களை உருவாக்கவேண்டும்

சென்னை, ஜூன் 14—
"நாட்டில் நிர்வாக அமைப்பை முற்றிலும் மாற்றியமைப்பதற்கு ஏற்றவாறு புதிய அரசியல் அமைப்புச் சட்டங்களை உருவாக்க வேண்டும்.

"அவ்வாறு புதிதாக அமைக்கப்படும் அரசியல் சட்ட தயாரிப்புக் குழு, மத்திய—மாநில அரசுகளுக்கிடையேயான உறவு முறைகள் போன்ற எல்லா அம்சங்களையும், தீரப் பரிசீலிக்க வேண்டும்.

"மாநிலங்களுக்கு முழுச் சுதந்தரம் அளிக்கும்வகையில் அரசியல் அமைப்புச் சட்டம் திருத்தி எழுதப்பட வேண்டும். நாட்டில் பொதுவாக அக்கறையுள்ள பிரச்சினைகளில் மட்டுமே மத்திய அரசு கவனம் செலுத்த வேண்டும்.

"இப்போதைய அரசியல் அமைப்பை உருவாக்கியவர்கள், நம் நாட்டின் பலதரப்பட்ட கலாச்சாரம், பல்வேறு மொழி—இனங்கள் போன்ற அம்சங்களை கருத்தில்கொண்டு, அதற்குரிய வகையில் சட்டங்களை உருவாக்காமல் இந்த அம்சங்களையே கவனிக்காமல் விட்டுவிட்டனர்!

"எல்லா மொழிகளுக்கும் சம உரிமை வழங்கப்படும் வரையில் மொழிப் பிரச்சினை தீருவதற்கு வழியில்லை!"

—கேரள முதலமைச்சர் **நம்பூதிரிபாடு**

---

தென்காசி இடைத் தேர்தல்

# கழக வேட்பாளருக்கு மார்க்சிஸ்டு கம்யூனிஸ்டு ஆதரவு

சென்னை, ஜூன் 14—
தென்காசி இடைத் தேர்தலில் தி. மு. கழக வேட்பாளர் கதிரவனுக்கு ஆதரவு தெரிவித்து இந்தியக் கம்யூனிஸ்டு மார்க்சிஸ்டுக் கட்சியின் தமிழக மாநிலக் குழுச் செயலாளர் தோழர் எம். ஆர். வெங்கட்ராமன் எம்.பி., செய்தித் தாள்களுக்கு அறிக்கை விடுத்துள்ளார்; அதன் விவரம் வருமாறு:—

"தென்காசி சட்டமன்றத் தொகுதியில் நடைபெறவிருக்கும் இடைத் தேர்தலில் தி. மு. கழக வேட்பாளர் கதிரவனை இந்தியக் கம்யூனிஸ்டுக் கட்சி (மார்க்சிஸ்டு) ஆதரித்து அவரது வெற்றிக்காகப் பாடுபடும்.

"இத்தேர்தலில், காங்கிரசு முற்றுக முறியடிக்கப்பட வேண்டியது மிகவும் அவசியம். பொதுத் தேர்தலின்போது மக்கள் தந்த படிப்பினையைக் காங்கிரசு ஏற்கவில்லை. இருபதாண்டுக் காலமாக நாட்டை நாசப்படுத்திய பழைய கொள்கைகளைக் காங்கிரசு கைவிடவில்லை.

"அதற்கு மாறாக, தங்கள் பொறுப்பை மூடி மறைக்கும் வகையில், மக்களின் அதிருப்தியைக் காங்கிரசல்லாதமாநிலங்கள்மீது திருப்பி, அவற்றைக் கவிழ்ப்பதையே நோக்கமாகக் கொண்டு சதித் திட்டம் போட்டுச் செயல்பட்டு வருகிறார்கள்.

"மத்திய அரசின் கையில் குவிந்துள்ள அதிகாரங்களும், நிதி வசதிகளும், காங்கிரசுக் கட்சியின் 'ஜனவிரோத'க் கொள்கைகளும்தான் நாடெங்கும் நெருக்கடியை உண்டாக்குகின்றன; மாநில அரசுகள் மக்களுக்கு எதுவும் செய்ய முடியாத நிர்பந்த நிலையையும் ஏற்படுத்தியுள்ளன.

"காங்கிரசுக் கொள்கைகள் முறியடிக்கப்பட்டாலன்றி மக்களுக்கு எதிர்காலமில்லை.

"இந்தப் பின்னணியில் நடைபெறும் தென்காசித் தொகுதி இடைத் தேர்தலில், காங்கிரசுக் கட்சியை மக்கள் மீண்டும் நிராகரித்துத் தீர்ப்புக் கூறுவது மிக மிக அவசியம்.

மார்க்சிஸ்டுக் கம்யூனிஸ்டுக் கட்சியின் நெல்லை மாவட்டக் குழுவும் கட்சி உறுப்பினர்களும் ஆதரவாளர்களும், தனிப் பொறுப்பேற்று-காலதாமதமின்றி முன்வந்து—தென்காசித் தொகுதியில் தி. மு. கழகத்தின் தேர்தல் இயக்கத்திற்கு இயன்ற உதவி அனைத்தும் செய்து-தி.மு. கழக வேட்பாளருக்கு வெற்றியைத் தேடித் தருமாறு கேட்டுக் கொள்கிறேன்."

### கலைக் குழு முகவரி

கே. கே. என். கலைக் குழுவின் வாசன்—வசந்தா—லிங்கம் பங்கேற்கும் 'ஐயோ! காங்கிரசே!' என்னும் கலைநிகழ்ச்சி நடத்த விரும்புவோர் தொடர்புகொள்க:—

ஆர். சீனிவாசன்,
செயலாளர் தி.மு.க.,
தாராசுரம் அஞ்சல்,
குடந்தை.

---

# மாணவர் 'படையெடுப்பு'

## வடக்கில் புதிய ஏற்பாடு

புதுடில்லி, ஜூன் 14—
கோடை விடுமுறைக்குப் பிறகு கல்லூரிகள் திறக்கப்பட்டுவருகின்றன.

புதிதாகக் கல்லூரிகளில் சேர வரும் மாணவர்களுக்கு எப்படி இடம் கண்டுபிடிப்பது என்ற பிரச்சினை கல்வி அதிகாரிகளுக்குப் பெரிய 'தலைவலி'யாகிக் கொண்டு வருகிறதாம்.

இந்தியாவில் அநேகமாக எல்லா மாநிலங்களிலுமே இது பெரிய பிரச்சினையாகத்தான் இருந்து வருகிறதாம்.

வட இந்தியாவிலுள்ள பல்கலைக் கழகங்களில் நிலைமை, உண்மையாகவே பயங்கரமாக இருக்கிறதாம். அவர்களும், கல்லூரிகளில் சேருவதற்கான தகுதியை உயர்த்துவது—புதிய கல்லூரிகளைத் துவக்குவது—இரண்டாவது 'ஷிப்டு'கள் நடத்துவது—என்றெல்லாம் எவ்வளவோ முறைகளைக் கையாண்டு பார்க்கிறார்களாம்.

டில்லி பல்கலைக் கழகத்தில் புதிய ஏற்பாடு ஒன்று செய்திருக்கிறார்கள். மாணவர்கள் தாம் ஏற்கனவே தேர்ச்சி பெற்றுள்ள தேர்வுகளைக் கொண்டே எந்தெந்தத் துறைகளில் வேலை தேடலாம் என்று தகவல் கொடுப்பதற்கு அங்கு ஏழு தகவல் நிலையங்களை ஆரம்பித்திருக்கிறார்கள். வேலை வாய்ப்புக் கிடைத்தால் ஒரு சிலராவது கல்லூரிக் கதவுகளைத் தட்டிக் கொண்டிராமல், வேலைக்குப் போகமாட்டார்களா என்ற [illegible]பிக்கையில் அவர்கள் இந்[illegible]பாடு செய்திருக்கிறார்க[illegible]

எஞ்சினீயரிங் பட்டதாரிகள் வேலைவாய்ப்பில்லாமல் கஷ்டப்படுகிறார்கள் என்று சிறிது காலமாகச் செய்திகள் வந்துகொண்டிருந்தபோதிலும், அந்தக் கல்லூரிகளிலும் மாணவர் படையெடுப்பு நிற்கவில்லையாம்.

ஆனால், பெரும்பாலான பல்கலைக் கழகங்களிலும், பாலிடெக்னிக்குகளிலும் மாணவர்களின் எண்ணிக்கையை ஏற்கனவே குறைத்துவிட்டார்கள்.

---

# அரசுப்போக்குவரத்துத் தொழிலாளர் சங்கம்

## செயற்குழுக் கூட்ட முடிவுகள்

மாநில அரசினர் போக்குவரத்துத் தொழிலாளர்-பொதுத்தொழிலாளர் சங்கக் குழுக் கூட்டம், 10—6—68 அன்று தோழர் எஸ். இராகவானந்தம் எம்.எல்.சி. தலைமையில் கூடியது; அதுபோது மார்ச் 25, 26, 27-ம் நாட்களில நடைபெற்ற மாணவர்-பஸ் தொழிலாளர் தகராறு குறித்து அரசு தொடுத்துள்ள கிரிமினல் குற்ற வழக்கைத் திரும்பப் பெற்றுக் கொள்ளும்படி அரசினரைக் கேட்டுக்கொள்ளும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

மேற்படி நாட்களில் நடந்த எதிர்பாராத விரும்பத்தகாத நிகழ்ச்சிகளைக்கண்டு இந்த நிர்வாகம் மிகவும் வேதனைபடுவதுடன், இத்தகைய நிகழ்ச்சி இனித் தமிழகத்தில் ஏற்படாதவண்ணம், தொழிலாளர் தோழர்களும்—மாணவ நண்பர்களும் தோழமை உணர்வோடு நடந்துக்கொள்ள குழு கேட்டுக்கொண்டது.

எங்காவது மோதுதல் ஏற்பட்டுவிடுமேயானால் இருசாராருடைய பிரதிநிதிகளும் கலந்து பேசி பிரச்சினைகளைத் தீர்த்துக்கொள்ள வேண்டுமென்றும், யாரும் கலவர நிகழ்ச்சியில் ஈடுபடாமலிருக்கவும் குழுக் கேட்டுக்கொண்டது.

இரு சாராரும் நடத்தும் பேச்சு வார்த்தையில் ஒரு சமூகமான முடிவு ஏற்படாவிடில், தொழிலாளர் நல அமைச்சரின் துணை நாடி பிரச்சினையைத் தீர்த்துக்கொள்வதென்றும் முடிவெடுக்கப்பட்டது.

---

# காவிரிப் படுகையில் நில அடி நீர் ஆய்வு

## ஐ. நா. நிதி ஒதுக்கீடு

புதுடில்லி, ஜூன் 14—
"காவிரிப் படுகையில் தரைக்கடியில் உள்ள நீர் வளத்தைப் பயன்படுத்திக் கொள்வது தொடர்பான இரண்டாம் கட்ட ஆய்வினை மேற்கொள்வதற்காக, ஐ. நா.-வின் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் 7,07,900

(4-ம் பக்கம் பார்க்க)



# ‘ஆண்டுதோறும் ஓர் இலட்சம் ரூபாய் அளிப்பேன்’

## குடிசைவாழ் மக்களுக்கு நிலையான வாழ்வளிக்க உதவி

### அண்ணா பிறந்த நாளில் முதல் காணிக்கை — புரட்சி நடிகர் எம்.ஜி. இராமச்சந்திரன் அறிவிப்பு

சென்னை, ஜூன் 15—

“குடிசையில் வசிக்கும் மக்களின் வாழ்க்கையுடன் விளையாடும் ‘தீ’யின் கொடுமையிலிருந்து அவர்களை நிரந்தரமாகக் காப்பாற்றும் முயற்சியை அவசரமாகச் செய்யவேண்டிய நெருக்கடி ஏற்பட்டிருக்கிறது.

“எனவே, திட்டமிட்டுச் செயல்பட்டுக் குடிசைவாழ் மக்களுக்குக் குடியிருப்பு வசதி அமைப்பதற்காக அரசினர் பெருமளவுத் தொகையைச் செலவிடவேண்டிய நிலையில் இருப்பதால், பொதுமக்கள் தங்களுடைய பங்கை நிரந்தரமான அளவில் செலுத்துவதைக் கடமையாகக் கொள்ளவேண்டுமெனக் கருதுகிறேன்.

“அந்த முறையில், ஆண்டுதோறும், என்னுடைய உழைப்பை அளித்து அதன்மூலம் ஓர் இலட்சம் ரூபாயை, முதலமைச்சர் அறிஞர் அண்ணா அவர்களிடம் அளிப்பது என முடிவு செய்துள்ளேன்.

“அறிஞர் அண்ணா அவர்களின் பிறந்த நாளான செப்டம்பர் திங்கள் 15-ம் நாளன்று முதல் தவணையாக ஓர் இலட்சம் ரூபாயை அளிக்க இருக்கிறேன்.

“ஏழைகளின் பக்கம் இலட்சக்கணக்கான இதயங்கள் உள்ளன என்பதைக் ‘தீ’ மனம்கொண்டோர் அறியவேண்டும்; அதற்கு நல்லோர் அனைவரும் நிரந்தரமான உதவியை அளிக்க முன்வருமாறு வேண்டுகிறேன்”

என்று, புரட்சி நடிகர் திரு. எம். ஜி. இராமச்சந்திரன் எம்.எல்.ஏ. அவர்கள் வெளியிட்டுள்ள அறிக்கையில் சுட்டிக்காட்டி வேண்டுகோள் விடுத்திருக்கிறார். அவர் மேலும் கூறியிருப்பதாவது :—

“சென்னையில் கடந்த மூன்று நாட்களாக வியாசர்பாடி பகுதியில் குடிசைகள் தீக்கிரையாகி, ஆயிரக்கணக்கான மக்கள் நிர்க்கதியான நிலைக்கு ஆளாக்கப்பட்டு வருகிறார்கள்.

“‘ஏதோ ஒரு நாள் ஏற்பட்ட இயற்கையான விபத்து போல் காணப்பட்டது; ஆனால், தொடர்ந்துகொண்டிருப்பது எப்படி—ஏன்’ என்ற கேள்வி எல்லோரிடத்திலும் உருவாகியிருக்கிறது.

“இந்த நிலையில், நண்பர் சிவாஜி கணேசன் ரூ. 11,000 உதவி அளித்திருப்பது, மற்ற கலைஞர்களும், பொதுமக்களும் உதவியளிப்பதற்கு மேலும் ஊக்கமளிக்கும் என நம்புகிறேன்.

“குடிசைவாழ் மக்கள், நாளெல்லாம் உழைத்துத் தாங்கள் மிச்சப்படுத்தும் பொருள்களைக் குடிசைகளில் சேர்த்துவைத்து இப்படி இழந்துவிடும் நிலையைத் தவிர்ப்பதற்கு அவ்வப்போது சிறு தொகைகளை அஞ்சல் நிலையத்தில் சிறு சேமிப்புக் கணக்கில் போட்டுவைப்பது நல்லது; அப்படிச் செய்தால், தேவைப்படும்போது பணம் பெற்றுக்கொள்ளவும், பாதுகாப்பாக இருக்கவும் பயன்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.”

# ‘கதிரவனை ஆதரியுங்கள்’

## சுதந்திராக் கட்சி அறிக்கை

சென்னை, ஜூன் 15—

தமிழகச் சுதந்திராக் கட்சியின் தலைவர் திரு. சா. கணேசன் அவர்கள் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது :—

“திருநெல்வேலி மாவட்ட, தென்காசி சட்டமன்றத் தொகுதியில் தி. மு. க. வேட்பாளராகப் போட்டியிடும் திரு. கே. எம். கதிரவனை சுதந்திரக் கட்சி ஆதரிக்கிறது.

“திரு. கதிரவன் தனிப்பட்ட முறையிலும் தகுதி நிறைந்த ஒருவர்.

“எனவே, அங்குள்ள எல்லா வாக்காளர்களும் திரு. கதிரவனுக்கு முழு ஆதரவும் தந்து வெற்றி கிடைக்கச் செய்ய வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

“சுதந்திராக் கட்சிக் கிளைக் குழுக்களும், ஊழியர்களும், அன்பர்களும், இவர் வெற்றிக்கு முனைந்து நின்று பணியாற்ற வேண்டுமென்றும் வேண்டிக்கொள்ளுகிறேன்.”

# அமைச்சர் சத்தியவாணிமுத்து தாயகம் திரும்பினார்

## விமான நிலையத்தில் சிறப்பான வரவேற்பு

### அண்ணா மற்றும் அமைச்சர்கள் வரவேற்றனர்

சென்னை, ஜூன் 14—

தமிழகச் செய்தித் துறை அமைச்சரும் தாழ்த்தப்பட்டோர் நல அமைச்சருமான திருமதி சத்தியவாணிமுத்து அவர்கள், தமது வெளிநாட்டுச் சுற்றுப் பயணத்தை முடித்துக்கொண்டு இன்று பிற்பகல் 2-மணியளவில் சென்னை திரும்பினார்கள்,

மீனம்பாக்கம் விமான நிலையத்தில் முதலமைச்சர் அண்ணா அவர்களும், கல்வி அமைச்சர் இரா. நெடுஞ்செழியன், உணவு அமைச்சர் கே. ஏ. மதியழகன், சட்ட அமைச்சர் செ. மாதவன், நலத்துறை அமைச்சர் எஸ். ஜே. சாதிக்பாட்சா, கழக அமைப்புச் செயலாளர் என். வி. நடராசன் எம்.எல்.சி., மற்றும் கழகப் பிரமுகர்கள் பலரும் வரவேற்றனர்.

அமைச்சரை வரவேற்பதற்காக விமான நிலையத்தில் ஆயிரக்கணக்கான கழகத் தோழர்கள் குழுமியிருந்தனர்.

முதலில் அண்ணா அவர்கள் மாலையணிவித்த பிறகு மற்றவர்கள் மாலை அணிவித்தனர்.

புரட்சி நடிகர் எம். ஜி ஆர் அவர்களின் துணைவியார் திருமதி வி. என். ஜானகி அவர்களும் மாலை அணிவித்தார்.

# அமைச்சர் மதியழகன் நடவடிக்கையால் 40 குடிசைகள் தப்பின

## தீப்பிடித்து எரிவதைக் கண்டதும் தீயணைக்கும் படையைத் தருவித்தார்

### பாதிக்கப்பட்டவர்களுக்கு உணவு வழங்க 100 மூட்டை அரிசிக்கு ஏற்பாடு

சென்னை, ஜூன் 14—

உணவு அமைச்சர் திரு. கே. ஏ. மதியழகன் அவர்களின் உடனடி நடவடிக்கையின் பயனாக இன்று 40 குடிசைகள் தீயிலிருந்து காப்பாற்றப்பட்டன.

திரு. மதியழகன் அவர்கள் இன்று காலை 11-30 மணியளவில் வியாசர்பாடி — புளியந்தோப்புப் பகுதியில் முந்திய நாட்களில் ஏற்பட்ட தீவிபத்துக்களினால் நாசமடைந்த பகுதிகளைப் பார்வையிட்டார். அந்த நேரத்தில் திடீரென்று ஒரு பகுதியில் தீப்பிடித்து எரிந்ததை அமைச்சர் கண்டார்; உடனே தீயணைப்புப் படை நிலையத்துடன் தொடர்பு கொண்டு தீயணைக்கும் படையைத் தருவித்தார்.

உடன் விரைந்து வந்த தீயணைப்புப் படை தீ மேலும் பரவாமல் அணைத்தது.

இதனால், பற்றி எரிந்து சாம்பலாக இருந்த 40 குடிசைகளும் உடைமைகளும் மீட்கப்பட்டன; ஒன்பது குடிசைகள் மட்டுமே தீயினால் பாதிக்கப்பட்டன.

அமைச்சருடன், வருவாய்த் துறைச் செயலாளர் திரு பி. கே. நம்பியார், சென்னை கலெக்டர் திரு. நபி, மாநகராட்சி ஆணையர் திரு. அம்பாசங்கர் ஆகியோரும் வந்திருந்தனர்.

அமைச்சர் மதியழகன், கடந்த மூன்று நாட்களாகத் தீவிபத்தால் பாதிக்கப்பட்டு வருந்து தவிக்கும் மக்களுக்கு உணவளிப்பதற்காக—100 மூட்டை அரிசி வழங்[illegible] உணவு வழங்கு துறைக்கு ஆணைபிறப்பித்தார்.

பாதிக்கப்பட்ட மக்களுக்கு அளிப்பதற்காகத் தயாரிக்கப்பட்டிருந்த உணவு நன்றாக இருக்கிறதா என்றும் அமைச்சர் சுவைத்துப் பார்த்தார்.

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

டம் முழுவதும் செல்வாக்கிருந்தது; ‘அவர்களது கொடி பறக்காத மாநிலம் இல்லை’ என்ற அளவுக்குச் செல்வாக்குப் படைத்திருந்தபோதே, அப்போது ஏதும் பெற்றிராத கழகத்தை அழிக்க முடியவில்லை என்றால், ஆல் போன்று தழைத்து வளர்ந்து — வேரூன்றி நிற்கின்ற இப்போதா அழித்துவிட முடியும்?”

—கல்வி -- தொழில் அமைச்சர்

இரா. நெடுஞ்செழியன்

(61-வது வட்டக் கூட்டத்தில்)

## கா. வேழவேந்தன் ஐதராபாத் பயணம்

### அ. இ. ஊராட்சிமன்றப் பயிற்சி மாநாட்டில் கலந்துகொள்கிறார்

சென்னை, ஜூன் 15—

ஐதராபாத் நகரில் ஒரு திங்கள் நடைபெறவிருக்கும் அனைத்திந்திய சமுதாய நல ஊராட்சிமன்றப் பயிற்சி மாநாட்டில் தமிழகத்தின் பிரதிநிதியாக திரு. கா. வேழவேந்தன் எம்.எல்.ஏ. கலந்துகொள்கிறார்.

இந்த மாநாட்டில் ஒவ்வொரு மாநிலத்திலிருந்தும் ஒரு சட்டமன்ற உறுப்பினர் கலந்துகொள்வார்.

தமிழகத்திலிருந்து கலந்துகொள்ளத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கும் தோழர் வேழவேந்தன் நாளை (ஜூன் 16) பகல் 1-மணியளவில் புறப்படும் ஐதராபாத் எக்ஸ்பிரஸில் பயணமாகிறார்.

இராசிபுரம் ஊராட்சி ஒன்றியத் தலைவரான திரு. எஸ். வரதராசனும், இம்மாநாட்டில் கலந்துகொள்கிறார்.


பாலர் அரங்கம்

ஜூன் 16-ந் தேதி பிற்பகல் 2-மணி ; மாலை 4-15 மணிக்கு

‘தந்தையைத் தேடும் மகள்’

(ரஷ்ய கலர் படம்)


## சென்னையில் திருவள்ளுவர் விழா

### அமைச்சர் மு. கருணாநிதி தலைமையில் கவியரங்கம்

சென்னை—இராயப்பேட்டை திருவள்ளுவர் மன்றச் சார்பில் திருவள்ளுவர் திருநாள் விழா, 16—6—68 அன்று மவுண்ட்ரோடு குழந்தைகள் அரங்கில் நடைபெறும்.

காலை 9-மணிக்கு அமைச்சர் மு. கருணாநிதி அவர்கள் தலைமையில் நடைபெறவிருக்கும் கவியரங்கத்தில் கவிஞர்கள் பொன்னிவளவன், கே. சி. எஸ் அருணாசலம், குடியரசு, முருகுசுந்தரம், அப்துல் ரகிமான், பூங்குன்றன், தமிழ்ப்பித்தன், எம். கே. ஆத்மநாபன், கருணானந்தம், புலமைப்பித்தன் ஆகியோர் பங்கேற்றனர்.

மாலை 6-30 மணிக்கு திரு. மு. இரா. பெருமாள் முதலியார் தலைமையில் துவங்கும் கருத்தரங்கில் அமைச்சர் திரு. மா. முத்துசாமி, திருவாளர்கள் ம. பொ. சிவஞானம் எம்.எல்.ஏ., ஏ. பி சனார்த்தனம் எம்.எல் சி., டி. செங்கல்வராயன் ஆகியோர் கலந்துகொள்கின்றனர்.

திரு. இராம வீரப்பன் வரவேற்புரையாற்றுவார்; ‘முத்தாரம்’ தினரன் நன்றியுரையாற்றுவார்.

## காவிரிப் படுகையில்..

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

டாலர் நிதி ஒதுக்கீடு அனுமதிக்கப்பட்டிருக்கிறது”

என்று ஐ. நா. செய்தி அறிக்கையொன்று கூறுகிறது.

வியன்னாவில் கூடிய ஐ. நா. மேம்பாட்டுத் திட்ட ஆட்சிக குழுவின் 6-வது கூட்டத்தில் இதுபற்றி முடிவு செய்யப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின்கீழ், அதிக விளைச்சல் தரும் பயிர் வகைகளைப் பயன்படுத்திக்கொள்வதற்கான தொழில் நுணுக்க ஆய்வுரைகள் உழவர்களுக்கு வழங்கப்படும்.

## நடக்க இருப்பவை

### பொதுக்கூட்டங்கள்

### 17--6--68

**சென்னை—அமைந்தகரை**

அறிஞர் அண்ணா மன்றச் சார்பில் திருவள்ளுவர் திருநாள்; மாலை 7 மணிக்கு பெருமாள் கோயில் தெருவில்; தலைவர் : ஆர். என். கணேசன்; பேசுவோர் : கி. மனோகரன் எம்.பி. ஏ. பி சனார்த்தனம் எம்.எல் சி., எச். வி. ஹாண்டே எம்.எல்.ஏ., நடிகர் சௌந்தரராசன், கேரளியன், ஓ. எஸ். பாலசுந்தரம், ஜே. வேணுகோபால்.

**நெய்வேலி**

எம். ஜி ஆர். மன்றச் சார்பில் மாலை 6 மணிக்கு வள்ளுவர் திடலில் (செய்தி நிலையம் அருகில்), தலைவர் : ஆ. சிங்காரம்; பேசுவோர் ; எஸ். முத்து எம்.எல்.சி., எஸ். காமராசு, இராசவேலு, மற்றும் பலர்.

**திருச்சி**

30-வது வட்டம் கருணாநிதி படிப்பகச் சார்பில், மாலை 6 மணிக்கு, துரைசாமிபுரம் கலைஞர் திடலில; தலைவர் : த கண்ணப்பன்; பேசுவோர்: எம். எஸ் மணி எம்.எல்.ஏ., அ. நடராசன் மலாமன்னன், எஸ் ஏ ஜி ராபி ஜே. தேவதாஸ். (மணி—சாம் குழுவினரின் கலைநிகழ்ச்சி உண்டு.)

**மணிகண்டம்**

தி. மு. க. துவக்க விழா; மாலை 6-மணிக்கு துவக்கப் பள்ளி எதிரில்! தலைவர் : அ கருப்பையா; பேசுவோர் : வி. எஸ். கோவிந்தராசன் எம் எல்.ஏ. வீ. சா. இளஞ்செழியன் எம்.எல் ஏ., கு. காமாட்சி, வி. எம் கணேசன், டி. என். வையாளி.

**பாண்டியபுரம்**

தி. மு. க. சார்பில் மாலை 7-மணிக்கு அண்ணா திடலில்; தலைவர் : கணக்கப்பிள்ளை; பேசுவோர் : வி. எஸ். கோவிந்தராசன் எம் எல் ஏ., சி பரசிவம், வி. எம். கணேசன், கே. எஸ் மாணிக்கம், தியாகராசன், டி. என். வையாளி, எஸ் எம். வி. சாமி, கே. சி. தங்கவேல், மற்றும் பலர்.

**ஆண்டாங்கோயில்**

தி. மு. க. சார்பில் மாலை 6-மணிக்கு; தலைவர் : கே. ஏ. எஸ். இராமச்சந்திரன்; பேசுவோர் : இரா. செழியன் எம்.பி., [illegible] அறிவழகன் எம்.எல்.சி., ந. [illegible]மசுந்தரம் எம்.எல் ஏ., என். சீனுவாசன், துரைகலியரத்தினம், மு. மைதீன் பாட்சா, என். சாமிநாதன். (சென்னை மணிவண்ணன்—பத்மினி குழுவினரின் கலை நிகழ்ச்சி நடைபெறும்.)

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக, திரு. இரா. செழியன் எம்.ஏ., எம்.பி., அவர்கள் ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு அழகிரி அச்சகத்தில் (24, சூரியநாராயண செட்டித் தெரு, சென்னை-13) அச்சிட்டு [illegible]